


# தமிழ்த்திரவியம்

## செய்திமடல் - 2023 - 2024

“உயர்தனி செம்மொழியாம்! தன்னிகரில்லா தமிழ்மொழியாம்!”

## துறை சுயவிவரம் :

**அன்னை ஸ்கொலாஸ்டிக்காகலைமற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி-2020** ஆம் ஆண்டுதொடங்கப்பட்டது.தமிழ்த்துறையில் இளங்கலைப் பாடப்படிப்பு 2021ஆம் ஆண்டில் தொடங்கி இரண்டாமாண்டில் பயணித்துவருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இத்துறையில் நான்குஉதவிப்பேராசிரியர்கள்பணியாற்றிவந்துள்ளனர்.ஒரு பேராசிரியர் முனைவர் பட்டம் பெற்றவர். இத்துறை மாணவர்களுக்கு பல்வேறு கருத்தரங்கங்கள், புதுமையான திறன்கள்,பாரம்பரிய விழுமியங்கள், திறமையான கற்பித்தல் முறைகள் மற்றும் பண்பாட்டுக் கலாச்சாரங்களை நடத்துவதன் மூலம் இலக்கியம்,மொழித்திறன் மற்றும் ஆளுமை மேம்பாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதில் தமிழ்த்துறை கவனம் செலுத்தி வருகிறது.

## தமிழ்த்துறைத் தலைவர்

**முனைவர்.வே.மங்களேஸ்வரி**

**M.A.,M.Phil.,M.A.,B.Ed.,Ph.D.,NET.,PGDCA**



### உதவிப்பேராசிரியர்கள்

**ஆ.மரியசுஜிதா M.A., B.Ed**

**சி. உமா மகேஸ்வரிM.A.,M.Phil.,B.Ed.,**

**சே. லெவேல் லூயி M.SC.,B.Ed.(M.A)**

## துறைச்செய்தி :

தமிழ்த்துறையின் சிறப்பம்சங்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைகின்றன. கல்வியின் குறிக்கோள்கள், இலக்குகள், தொலைநோக்குப் பார்வைகள் போன்றவை இடம் பெறுகின்றன. திறமை வாய்ந்த பல்நோக்குடைய அறிவார்ந்த மாணவர்களாக உருவாக்குதல் தமிழ்த்துறையின் முக்கிய நோக்கமாகும். மேலும் தமிழ் இலக்கிய மன்ற விழா,போதைப் பொருள் விழிப்புண்வு முகாம் கிறிஸ்துமஸ்விழா,சமத்துவப் பொங்கல்விழா,சுதந்திர தினவிழா, இலக்கியச் சிந்தனைச் செயல்பாடுகள் , வார்த்தை விளையாட்டு மற்றும் பல்வேறு தினங்களை முன்னிட்டு உறுதிமொழிகள் மேற்கொள்ளுதல்,பெண்கள் தினவிழா,உணவுத் திருவிழா,வாக்காளர் தின விழா, நலப்பணித்திட்டத்தில் மாணவர்கள் ஈடுபடுதல்,கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துத் செல்லுதல் போன்ற செயல்பாடுகளைத் தமிழ்த்துறை மாணவர்கள் மேற்கொண்டனர் என்பதை இச்செய்தி மடல் விளக்குகிறது.

## தமிழ்த்துறையின்குறிக்கோள்கள் :

- தீவு மக்களுக்குகல்வி அறிவைப் புகட்டிப் பெண்கல்வியை உயர்த்துதல்.
- எதிர்காலவாழ்க்கைக்குப் பெண்கல்விஅவசியம் என்பதைஉணரவைத்தல்.
- பெண்கள் பிறரை சார்ந்து வாழாமல் '**தன் கையே தனக்கு உதவி**'என்ற நம்பிக்கையுடன் செயல்பட வைத்தல்.
- மாணவர்களின் திறமைகளைக் வெளிக்கொணர்தல்.
- அப்துல்கலாம் பிறந்த மண்ணில் புரட்சிப் பெண்களை உருவாக்குதல்

## தமிழ்த்துறையின் நோக்கக்கூறுகள் :

- தமிழ்மொழியின் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்தல்.

- பழங்கால மற்றும் நவீனத் தமிழ் இலக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுதல்.
- மாணவர்களின் திறன் மற்றும் நெறிமுறைகளை ஊக்கப்படுத்துதல்.
- போட்டித்தேர்வில் தமிழில் அதிக மதிப்பெண் பெற ஆயத்தப்படுத்தி அரசுவேலையில் பணியமர்த்த முயற்சித்தல்.
- கைத்தொழில் கற்றுக் கொடுத்து எதிர்கால வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துதல்.
- நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்.
- '**தமிழம்**' என்ற கணிப்பொறி தட்டச்சு பயிற்சியளித்தல்.கணினி அறிவைப் பெற பயிற்சியளித்தல்.
- மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டுபிடித்து பயிற்சியின் மூலம் ஊக்கமளித்து பல்வேறுப் போட்டிகளில் பங்குபெறச் செய்தல்.
- திறமை வாய்ந்த பல்நோக்குடைய அறிவார்ந்த மாணவர்களை உருவாக்குதல்.

## தமிழ்த்துறையின் தொலைநோக்குப் பார்வை:

- ஆக்கப்பூர்வமான சிந்தனை மற்றும் ஆளுமை வளர்ச்சியுடன் தொடர்புதிறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.
- நவீன சூழலுக்கேற்ப மனிதநேய அணுகுமுறையுடன் நேர்மறையான அணுகுமுறையை உருவாக்குதல்.

## தமிழ்த்துறையின் செயல்பாடுகள்

### தமிழ் இலக்கியமன்றவிழா :

தமிழ் இலக்கிய மன்றவிழாவில் கல்லூரி முதல்வர் முனைவர்.அருட்சகோதரி. ஆனிபெர்பட் சோபி அவர்கள் தலைமையேற்று இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். இவ்விழா முனைவர்.வே.மங்களேஸ்வரி, தமிழ்த்துறைத் தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. "**இலக்கியம் வகுத்த வாழ்வியல் சிந்தனைகள்** " என்ற தலைப்பில் அரசு மகளிர்க் கலைக் கல்லூரி, பேராசிரியை, முனைவர்.ச.கனகவள்ளி அவர்கள் கருத்துக்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வு மாணவிகளின் எதிர்கால வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மாணவர்களிடம் பொதுஅறிவு

வினாக்கள் எழுப்பி விடையளித்த மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார்.







## போதைஒழிப்புத் தினம் :

அன்னை ஸ்கொலாஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதைப் பொருள் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு கல்லூரி செயலர், முதல்வர், துணைமுதல்வர் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் போதைப் பொருள் பயன்படுத்தமாட்டோம் என்று உறுதிமொழி மேற்கொண்டனர். போதைப் பொருளுக்கு அடிமையாகும் மனிதர்களை மீட்டெடுப்போம் என்று உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். மேலும் **யாகப்பா பஸ் நிறுத்தத்திலிருந்து தர்கா பஸ் நிறுத்தம் வரை** போதைப் பொருள் ஒழிப்புப் பற்றி ஊர்வலப் பேரணி நடத்தப்பட்டன. தங்கச்சிமடம் காவல்துறை ஒத்துழைப்புடன் கல்லூரி செயலர், முதல்வர், துணைமுதல்வர் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.




## சுதந்திரதினவிழா :

76 –வதுசுதந்திரதினவிழாவைமுன்னிட்டுஅன்னை ஸ்கொலாஸ்டிக்காகலைமற்றும் அறிவியல் கல்லூரியில் ஆகஸ்ட் -15 இல் பல்வேறு போட்டிகள் நிகழ்த்தப்பட்டன. இவ்விழாவிற்கு சிறப்புவிருந்தினராக உயர்திரு. தினேஷ் குமார் வருகை தந்தார். வருங்காலத்தில் இந்தியாவைமுன்னேற்றம் உள்ள நாடாக மாற்றுவது மாணவர்களால் தான் முடியும் என்பதைக் கூறி பல்வேறுஅணுகுமுறைகளைக் கூறி விளக்கி சிறப்பித்தார். கல்லூரி முதல்வர் முனைவர். அருட்சகோதரி .சோபி அவர்கள் இந்நிகழ்வைத் தொடங்கி வைத்தார்.மாணவிகள் விடுதலைஉணர்வுப் பாடல்கள் ,நடனம்,மௌனநாடகம் போன்ற நிகழ்வுகளை நிகழ்த்தினர்.கல்லூரி செயலர்,முதல்வர்,துணைமுதல்வர் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.








## இலக்கியச் சிந்தனை வினாடி – வினா :

**இலக்கியச் சிந்தனைகள் வினாடி -- வினாப்போட்டி** 18.01.2024 அன்று தமிழ்த்துறை மாணவிகளுக்கு நிகழ்த்தப்பட்டது. வெற்றிபெற்ற மாணவிகளுக்கு தமிழ்த்துறை சார்பாக பரிசுகள வழங்கப்பட்டன.







## வார்த்தை விளையாட்டு :

தமிழ்த்துறை மாணவிகளுக்கு வார்த்தை விளையாட்டு நிகழ்வு மூலம் நடிப்புத்திறனால் செய்து காட்டி வார்த்தைகளைக் கண்டுபிடித்தல் நிகழ்த்தப்பட்டது. வெற்றி பெற்ற மாணவிகளுக்கு தமிழ்த்துறை சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டன.



**பட்டிமன்றம் :**

தமிழ்த்துறை மாணவிகளுக்கு வாழ்க்கைக்கு அவசியம் பணமா? படிப்பா? என்ற தலைப்பில் மாணவிகளின் திறன்மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் 30.01.2024 அன்று தமிழ்த்துறை மாணவிகளுக்கு **பட்டிமன்றம்** நிகழ்த்தப்பட்டது.



**நெருப்பில்லாமல் சமைத்தல் :** வணிக மேலாண்மைத்துறை நடத்திய நெருப்பில்லாமல் சமைத்தல்போட்டியில் தமிழ்த்துறை மாணவிகள் பங்குப் பெற்று வெற்றி பெற்றனர்.



**தீபத் திருநாள் விழா :**

தீபத் திருநாளாம் தீபாவளியை முன்னிட்டு துறைவாரியாக பல்வேறுப் போட்டிகள் நிகழ்த்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன






## கிறிஸ்துமஸ் விழா :

கிறிஸ்துமஸ் விழாவைமுன்னிட்டுகுடில் அமைக்கும் போட்டியில் தமிழ்த்துறைமாணவிகள் கலந்துகொண்டனர். கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் போட்டு சிறப்பித்தனர்.






**பொங்கல் விழா :** பொங்கல் விழாமுன்னிட்டுபொங்கல் வைத்தல்,உரியடித்தல்,நீர் நிரப்புதல்,கயிறு இழுத்தல் போன்றபோட்டிகளில் தமிழ்த்துறைமாணவிகள் கலந்துகொண்டனர்.







**கல்விச்சுற்றுலாப் பயணம் :**

**மதுரை :**

2023 நவம்பர் 3அன்றுபெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க,அவர்களின் அனுமதியோடு முதலாமாண்டு மாணவிகள், இரண்டாம் ஆண்டு மாணவிகள், மூன்றாமாண்டு மாணவிகள் மற்றும் துறைத்தலைவர் முனைவர் வே.மங்களேஸ்வரி, உதவிப் பேராசிரியை சே.லெவேல் லூயி,போன்றோர் கல்விச் சுற்றுலாவிற்காக மதுரை சென்றனர்.

கீழடி தொல்லியல்துறை, காந்திமியூசியம், ராஜாஜிபூங்கா, உலகதமிழாராய்ச்சி செம்மொழித் தமிழ்ச்சங்கம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் மாணவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர முடிந்தது.








## சித்தன்னவாசல் ,குடுமியான் மலை,திருமயம் கோட்டை :

2024 **பிப்ரவரி-23**அன்றுபெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்கஅவர்களின் அனுமதியோடு இரண்டாம் ஆண்டுமாணவிகள் 4பேர், மூன்றாமாண்டுமாணவிகள் 6 பேர் மற்றும் துறைத்தலைவர் **முனைவர் வே.மங்களேஸ்வரி**உதவிப்போராசிரியை**உமாமகேஸ்வரி**போன்றோர் கல்விச் சுற்றுலாவிற்காகசித்தன்னவாசல் சென்றனர்.

சித்தன்னவாசல் ஓவியங்கள்,சமணர்படுக்கைகள்,திருமயம் கோட்டை,குடுமியான் மலைகுடைவரைக்கோயில்,அரசாங்கஅருங்காட்சியகம்,போன்ற இடங்களுக்குஅழைத்துச் செல்வதன் மூலம் மாணவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தையும்,புடைசிற்பங்கள் பற்றியும் உணரமுடிந்தது.










## வாக்காளர் தினம் :

உலக வாக்காளர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. **“என் வாக்கு என் உரிமை”** தலைப்பில் இந்நிகழ்வு நடத்தப்பட்டது.





**மீன்வளத்துறை பார்வையிடுதல் ( CMFRI) :**

மீன்வளத்துறைக்குமாணவர்களைஅழைத்துச் சென்றுவந்ததன் மூலம் மீன்படிப்புமுறை,மீன்வளம் காத்தல்,கடல்வாழ் உயிரினங்கள் போன்றவற்றை பற்றிய அறிவைப் பெறுவதற்கும்,.பல்வேறு கடல்வாழ் உயிரினங்களை அறிந்து கொள்ள மாணவர்களுக்கு பேருதவியாக அமைந்தது.





## பெண்கள் தினம் :

உலகபெண்கள் தினத்தைமுன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினராக ஆரம்ப சுகாதார நிலையம்,மண்டபம் **மருத்துவர். நான்சி** அவர்கள் பெண்களுக்கான ஆரோக்கியம் பற்றிய கருத்துக்களை விளக்கி சிறப்பித்துள்ளனர்.










## நாட்டுநலப்பணித்திட்டத்தில் மாணவிகள் பங்குபெறுதல் :

நாட்டுநலப்பணித்திட்டத்தின் மூலம் ஒருகோடி பனை மரம் விதை நடுவதிலும்,அரியமான் கடற்கரையில் சுத்தம் செய்வதிலும் மாணவிகள் ஈடுபட்டன . மேலும் நாட்டு நலப்பணித்திட்டத்தின் மூலம் தமிழ்த்துறைத் தலைவர் நடத்திய சிறப்பு முகாமிலும் மாணவிகள் பங்கு பெற்றனர்.







## நாட்டு நலப்பணி திட்டத்தின் கீழ் ராமேஸ்வரத்தில் தூய்மை பணி மேற்கொண்ட கல்லூரி மாணவிகள்



ராமேஸ்வரம், மார்ச் 23-

பாம்பன் பகுதியில் இயங்கி வரும் அன்னை ஸ்கொலாஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி மாணவிகள் நாட்டு நலப்பணித் திட்டத்தின் கீழ் ராமேஸ்வரம் நகராட்சிக்கு உட்பட்ட மாங்காடு கிராம பகுதிகளில் தூய்மைப் பணிகள் நடைபெற்றது.

ராமேஸ்வரம் மாங்காடு கிராமத்தில் நடைபெற்ற நாட்டு நலப்பணி திட்ட முகாமிற்கு முகாம் அலுவலர் முனைவர் மங்களேஸ்வரி, கல்லூரி முதல்வர் அருட்சகோதரி. முனைவர். ஆனி பெர்பட் சோபி ஆகியோர்கள் தலைமை வகித்து பின்னர் தூய்மை பணிகளை தொடங்கி வைத்தார். மாணவிகள் மத்தியில் கல்லூரி பேராசிரியர் வள்ளிவிநாயகம் நாட்டு நலப் பணித்திட்ட செயல்பாடுகள் பற்றி விளக்கி சமூகப்பணி செய்ய ஊக்கமும் ஆக்கமும் அளித்தார்.

ஏழு நாட்கள் நடைபெற்ற தந்தை பணியில் ஒவ்வொரு நாளும் சிறப்பு விருந்தினர்களாக சம்பை, மாங்காடு கிராம தலைவர்கள் மற்றும் கைத்தொழில் பயிற்றுநர்கள், வருகை தந்து மாணவிகளுக்கு தூய்மைப்பணிகள், சுகாதாரம், மரம் வளர்ப்பது குறித்து ஆக்கச் செயல்பாடுகளான கருத்துக்களை எடுத்துரைத்து ஊக்கமளித்தனர்.

முகாமில் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ராமேஸ்வரம் நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மற்றும் கிராம பொது மக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

MADURAI
வெள்ளி, மார்ச் 22, 2024 5 இந்து தமிழ் திசை



↑ சம்பை கிராமக் கோயில் வளாகத்தை சுத்தம் செய்த கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட மாணவிகள்.

## பாம்பன் மகளிர் கல்லூரி சார்பில் நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம்

● ராமேசுவரம்

பாம்பனில் உள்ள அன்னை ஸ்கொலஸ்டிக்கா கலை அறிவியல் மகளிர் கல்லூரி சார்பில் சம்பை மீனவ கிராமத்தில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது

முகாமை கல்லூரி முதல்வர் ஆனி பெர்பட் சோபி தொடங்கி வைத்தார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் வள்ளிநாயகம், சம்பை கிராமத் தலைவர் பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற சம்பை அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

